**<u>கோவை மருத்துவ மையம்-மருத்துவமனை லிமிடெட்</u>**
**<u>38வது ஆண்டு பங்குதாரரின் பொதுக்கூட்டம்</u>**
**<u>2023-2024</u>.**

**நிகழ்வு முறை : வீடியோ கான்பரன்சிங்/ ஆடியோ விசுவல் மூலமாக**

**<u>நாள்: 14 ஆகஸ்ட் 2024</u>** **<u>நேரம்: மாலை 4.00 மணி</u>**

**அன்புமிக்க மருத்துவமனை பங்குதாரர்களே:**

**எல்லோருக்கும் எங்களுடைய மனமார்ந்த வாழ்த்துக்கள்.**

38-வது ஆண்டு கோவை மருத்துவ மைய பொதுச் சபை கூட்டத்தில் பங்கு கொண்டிருக்கும் யாவருக்கும் நானும் நம்முடைய இயக்குனர்களும் வணக்கத்தை சொல்லிக் கொள்கிறோம்.

கோவிட்-19 முடிந்த பின்பும் இப்பொழுது பல காரணங்களால் பொதுக்கூட்டத்தை இந்த வருடமும் காணொளி (Video) வாயிலாகவும் இதர ஒலி, ஒளி(OAVM) வாயிலாகவும் நடத்துகிறோம்.

2023-24 ஆண்டு நமக்கு ஒரு நல்ல திருப்தியான வருடம். கோவிட்-(19)க்கு பிறகு எல்லா கடினங்களும் நீங்கி விட்டன. இப்பொழுது மருத்துவமனை பழையபடி சரியான நிலையில் நடந்து கொண்டு இருக்கின்றது. 20% வளர்ச்சி இந்த ஆண்டு அடைந்துள்ளது. லாப சதவிகிதமும் நன்றாக உள்ளது. கோவையில் இருக்கும் பிரதான மருத்துவமனையும் 4 புற மருத்துவ மையங்களும் சிறப்பாக நடந்து கொண்டு இருக்கின்றன. இப்பொழுது கே.எம்.சி.ஹெச் மருத்துவ குழுமத்தில் 2000 படுக்கை வசதிகள் அமைந்துள்ளன. கே.எம்.சி.ஹெச் மருத்துவக் கல்லூரி- மருத்துவமனை இப்பொழுது ஒரு பெரிய நிறுவனம். மருத்துவ கல்லூரிக்கு தேவையான எல்லா வசதிகளும் நமது மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இருக்கிறது. கோவை மெடிக்கல் சென்டர் மருத்துவக் கல்லூரியில் மருத்துவப் படிப்புக்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளும் இருக்கின்றன. மருத்துவ கல்லூரி தொடங்கி இப்பொழுது 5-வது ஆண்டிற்கு வந்து விட்டோம். அதன் செலவை அதே பார்த்துக் கொள்ளும் அளவுக்கு வந்து விட்டது. ஹவுஸ் சர்ஜன் டாக்டர் பயிற்சி(CRMI) 27.5.2024 இல் ஆரம்பித்து விட்டோம். இப்பொழுது நமது மருத்துவக் கல்லூரியில் 750 மாணவர்கள் இருக்கின்றனர். அடுத்த ஆண்டு மேற்படிப்பு(Post Graduate) பட்டப்படிப்புப் பகுதியும் ஆரம்பிக்க இருக்கின்றோம்.

ஒரு மகிழ்ச்சியான செய்தி என்னவென்றால் நமது மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு நன்றாகவே நோயாளிகள் வந்து கொண்டிருக்கின்றனர். அவர்களுக்கு இலவசமாகவும் குறைந்த கட்டணத்திலும் மருத்துவம் செய்து கொண்டிருக்கிறோம். வெளி நோயாளிகளும் உள்நோயாளிகளும் நிறைந்தே உள்ளனர். நமது பங்குதாரர்களுக்கு என்னுடைய வேண்டுகோள். இந்த மாதிரியான சலுகை முறை வைத்தியத்திற்கு தாங்கள் தெரிந்தவர்களை தாராளமாக அனுப்பி வைக்கவும். நமது மெடிக்கல் கல்லூரி மருத்துவமனையில் எல்லாவித வியாதிகளுக்கும் வைத்திய வசதி இருக்கின்றது. எல்லா வித டெஸ்ட்களும் இங்கே அமைந்துள்ளது. பிரதான மருத்துவமனையில் இருக்கும் எல்லா வசதிகளும் இந்த மருத்துவமனையில் இருக்கின்றது.

நமது மருத்துவமனைகள் - பிரதான மருத்துவமனை, வெளியிடத்தில் இருக்கும் மருத்துவமனைகள் - இவை யாவையும் சிறந்த மருத்துவ சாதனங்களுடனும் சிறந்த மருத்துவர்கள் உடனும் நடத்தப்பட்டு வருகின்றன.

எப்பொழுதும் நமது மருத்துவமனைகளில் புதிய சிறந்த கருவிகள் இருக்க வேண்டும் என்பது நமது குறிக்கோள். இப்பொழுது தான் கொண்டுவரப்பட்ட Knee Replacement and Hip Replacement ரோபோடிக் அறுவை சிகிச்சை முறை சாதனங்கள் வாங்கப்பட்டுள்ளன. தோல் சிகிச்சை - அழகு சாதன முறைகள் இப்பொழுது மிகவும் பிரபலம். அதனால் நமது மருத்துவமனையிலேயே Derma Care என்ற நவீன அமைப்பை ஏற்படுத்தி உள்ளோம். லேட்டஸ்ட் ஆன லேசர் சிகிச்சை கருவிகள் வாங்கப்பட்டுள்ளன. Mobile C.T. ஸ்கேனும் நமது மருத்துவமனையில் உள்ளது. சூலூர், ஈரோடு மருத்துவமனைகளுக்கு C.T ஸ்கேன், MRI ஸ்கேன், Cath Lab எல்லாம் சேர்த்துள்ளோம். இதனால் இந்த மையங்கள் திறம்பட நடந்துகொண்டு இருக்கின்றன.

இவைகளுக்கும் எல்லாம் மேலாக கோவை மருத்துவமைய பிரதான மருத்துவமனையில் OP Block - வெளிய நோயாளிகள் பிரிவு ஆரம்பிக்கப் போகிறோம். இது ஆரம்பிக்கும் பொழுது நம் KMCH மருத்துவமனை கொங்கு மண்டலத்திலேயே ஒரு பெரிய மருத்துவமனை கட்டிட முறையிலும் சிறந்ததாக இருக்கும். இரண்டு லட்சம் சதுர அடியில் இந்த OP Block இருக்கும். கட்டிட செலவும் உபகரணங்கள் செலவும் ரூபாய் 150 கோடியாகவும் இருக்கும். புதுப்புது உபகரணங்கள் இதில் இருக்கும். Hybrid ஆபரேஷன் அறைகளும் இதில் அமையும். KMCH தொடங்கி 35 ஆண்டுகளுக்குப் பிறகு இப்பொழுது தான் நமக்கு பிரதான முகப்பு கிடைத்திருக்கின்றது.

சமீபத்தில் நீலாம்பூர் பகுதியில் ஒரு புதிய இடத்தை எடுத்துள்ளோம். நமது பிரதான மருத்துவமனை இடத்தில் மேலும் வளர இடமில்லை. செவிலியர் விடுதிகளையும், சில கல்வி வசதியையும் இந்த புதிய இடத்திற்கு மாற்ற வேண்டி உள்ளது. இந்த மாற்றத்தில் கிடைக்கும் இடத்தில் மேலும் 100 படுக்கைகள் கொண்ட மருத்துவ வசதிகள் செய்யப்பட்டுள்ளது. Allied Health Science படிப்புகளும், செவிலியர் விடுதிகளும் இந்த புதிய இடத்தில் இருக்கும்.

இப்பொழுது கே.எம்.சி.ஹெச் மருத்துவமனை குழுமத்தில் மிகச்சிறந்த டாக்டர்கள், செவிலியர்கள், தேர்ச்சி பெற்ற ஊழியர்கள், மிகச்சிறந்த மருத்துவ வசதிகள் எல்லாம் நன்றாக அமைந்துள்ளன. அதனால் நமக்கு நோயாளிகளிடம் நல்ல பெயர் இருக்கின்றது. நோயாளிகளின் திருப்திதான் மிகவும் முக்கியம். அதற்காக எல்லாவித ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. வெளிநாட்டு நோயாளிகளும் வேறு மாகாண நோயாளிகளும் நமது மருத்துவமனையை நாடி வந்து கொண்டிருக்கின்றனர். நமது நாட்டில் நமது மருத்துவமனைகள் குறைந்த செலவில் நல்ல மருத்துவங்களை செய்து கொண்டிருக்கின்றன. அதனால்தான் இந்தியாவிற்கு நிறைந்த NRI நோயாளிகள் வந்து கொண்டு இருக்கின்றனர்.

ஆனாலும் மருத்துவமனையை நடத்துவது என்பது சிரமமான காரியம். மருத்துவர்கள், செவிலியர்கள், ஊழியர்கள் மற்ற நிர்வாக உறுப்பினர்கள் என்று பல பேர்கள் மருத்துவமனையில் இருக்கின்றனர். மருத்துவமனையை பராமரிப்பது என்பது பெரிய வேலை. உயர்ந்த கருவிகளும் தேவை. இவைகளின் செலவுகள் வருடா வருடம் அதிகமாகி கொண்டே போகிறது. இதற்காக மருத்துவமனையின் வருமானத்தையும் அதிகப்படுத்த வேண்டி இருக்கிறது. நோயாளிகளுக்கு செலவு அதிகமாவதற்கு இது ஒரு முக்கிய காரணம்.

நமக்கு இப்பொழுது ஒரு முக்கிய நல்ல செய்தி என்னவென்றால் கரூர் பகுதியில் 10 மெகாவாட்டில் சூரிய மின்சார சக்தியை ஏற்படுத்தி உள்ளோம். இதனால் மருத்துவமனையின் பகல் நேரம் மின்சார செலவு சரி செய்யப்பட்டுள்ளது. ஆனாலும் இரவு நேரம் மின்சார செலவை சரி செய்ய Windmill போட வேண்டி இருக்கும்.

சிறப்பாக நடந்து கொண்டு இருக்கும் நமது மருத்துவ குழுமத்தில் இரண்டு பகுதிகள் இருக்கின்றன.

1. மருத்துவ சேவைகள்
2. மருத்துவக் கல்வி

மூன்று பகுதிகளும் சிறப்பாக நடந்து கொண்டு இருக்கின்றன. இதனால் இந்த வருட (2023-24) வருமானம் நன்றாக உள்ளது. ரூபாய் 1220 கோடி வருமானம். ரூபாய் 180 கோடி லாபம். 19% வளர்ச்சி இந்த ஆண்டில் அடைந்து உள்ளோம். நமது மருத்துவமனை டைரக்டர்கள் இதனால் மிகவும் திருப்தி அடைந்து 100% டிவிடெண்ட் கொடுக்க பரிந்துரை செய்துள்ளனர். நானும் நமது இயக்குனர்களும் உங்களுடைய ஆதரவுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். உங்களுடைய தொடர்ந்த ஆதரவு எங்களுக்கு மிகவும் தேவை. நமது டாக்டர்கள், செவிலியர்கள், ஊழியர்கள் எல்லாம் சரியாக நமது நோயாளிகளைக் கவனித்துக் கொண்டு இருக்கின்றனர். அவர்களுக்கு எங்களுடைய நன்றிகளை, அரசாங்க அதிகாரிகள், நமக்கு பொருட்கள் கொடுப்பவர்கள் எல்லாம் சிறப்பாக நமக்கு உதவியாக இருக்கின்றனர். இந்தியன் பேங்க், இந்தியன் ஓவர்சீஸ் பேங்க் இரண்டும் நமக்கு முக்கியமான வங்கிகள். அவர்கள் தொடர்ந்து நமக்கு உதவியாக இருக்கின்றனர். அவர்களுக்கும் நம்முடைய வணக்கங்கள்.

நானும் நமது இயக்குனர்களும் வந்திருக்கும் எல்லோருக்கும் வணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றோம். உங்களுடைய வாழ்த்துக்கள் மருத்துவமனையை மேலும் சிறப்பாக நடத்த உறுதுணையாக இருக்கும்.

நன்றி
வணக்கங்கள்

டாக்டர் நல்லா பழனிசாமி
நிர்வாக இயக்குனர்
KMCH லிமிடெட்